**ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையின் பிரசாத் தொடங்கொடகேவுடனான இராஜாங்க செயலாளர் மைக்கல் ஆர். பொம்பேயோவின் நேர்காணல்**

ஒக்டோபர் 28, 2020

**கேள்வி:** இராஜாங்கச் செயலாளர் பொம்பேயோ அவர்களே, எமக்கு இந்த சிறந்த வாய்ப்பை வழங்கியமைக்காக தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினி சார்பில் நான் நன்றிகளைக் கூறிக் கொள்வதுடன், உங்களுடனான மேற்கொள்ள கிடைத்திருக்கும் இந்த முக்கிய கலந்துரையாடல் தொடர்பில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம்.

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** உங்களுடன் கலந்துரையாட கிடைத்திருப்பது அருமையான விடயம். கொழும்புக்கு வர கிடைத்தமை சிறப்பானதாகும். இதுவரை எனக்கு மிகவும் சிறப்பான விஜயமொன்றாக இது அமைந்துள்ளது.

**கேள்வி:** இராஜாங்க செயலாளர் பொம்பேயோ அவர்களே, உங்களின் இந்த இலங்கை விஜயம் பல்வேறு வழிகளில் தலைப்புச் செய்தியாகக் காணப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு மிக நெருங்கிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் விஜயம் என்பது முதலாவதானதாகும். அடுத்ததாக, இராஜாங்க திணைக்கள் அதிகாரியொருவரினால் இலங்கை தொடர்பில் விடுக்கப்பட்ட அறிக்கையொன்று காணப்படுகிறது. ஆகவே, இந்த விஜயத்திற்கு ஊடகத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட பல வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. இந்த விஜயத்திற்கான உங்களது வரைவிலக்கணம் என்ன?

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** இந்தப் பிராந்தியத்துக்கு நான் பல தடவைகள் வியஜம் செய்துள்ளேன். ஐக்கிய அமெரிக்காவுக்கு இது மிகவும் முக்கியமான பிராந்தியமொன்றாகும். உலகெங்கிலும் நாம் ஜனநாயக நட்பை மதிக்கின்றோம். நான் இங்கு விரைவில் வருவேன் என நம்பியிருந்தேன், முன்னதாகவே திட்டமிடப்பட்டிருந்தபோதும் அதை இரத்து செய்ய வேண்டி ஏற்பட்டது. எனினும், இன்று இங்கு வர முடிந்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் ஏமாற்றமடையவில்லை. ஜனாதிபதி ராஜபக்ஷவுடான எனது சந்திப்பு, வெளிநாட்டு அமைச்சருடனான எனது சந்திப்பு என்பன சிறப்பாக அமைந்தன.

சுதந்திரமான வர்த்தகம் மற்றும் நியாயமான வர்த்தகத்தை விரும்பும் சுதந்திரமான மற்றும் திறந்த இந்து சமுத்திரம் மற்றும் முற்றிலுமான இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை விரும்பும் எமது குடும்பங்களுக்கான வாழ்க்கையை சிறப்பானதாக்குவதற்கு ஜனநாயக நாடுகளுடன் பணியாற்ற விரும்பும் பகிரப்பட்ட நோக்கமொன்று இலங்கை மக்களுக்கும் அமெரிக்க மக்களுக்கும் இடையில் இருப்பதை நீங்கள் அவதானிக்க முடியும். எமது நல்ல பங்காளர்களுடன் இணைந்து செயற்படவும், அக்கறைப்படவும் அமெரிக்கா விரும்பும் விடயங்களும் இவையே. இன்று இந்த நோக்கத்தை விஸ்தரிக்க முடிந்துள்ளது என நான் நம்புகின்றேன்.

**கேள்வி:** முக்கியமான பொருளாதார நன்மைகளுடன் கூடிய சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியமொன்றுக்கான ட்ரம்ப் நிர்வாகத்தின் கொள்கையைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். எனவே, தற்பொழுது பாதுகாப்பும் அதில் ஓர் அங்கம் என்பதுடன், இந்த ஒட்டுமொத்த கொள்கையில் இலங்கை எந்த ஸ்தானத்தில் இருக்கிறது? அது இலங்கைக்கு எவ்வாறு நன்மையளிக்கும்?

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** அதாவது, இலங்கை ஒரு முக்கியமான கப்பல் பாதையை அண்மித்ததாக அமைந்திருப்பது ஒரு விடயம். அத்துடன், விவசாய உற்பத்திகள், ஆடை உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான பெரும் ஆற்றலையும் அது கொண்டுள்ளது. வர்த்தகத்துக்கான ஆற்றல் இருக்கும் போதும், நாடுகள் மீது உண்மையான சுமையை ஏற்படுத்தும் இந்த கொள்ளையடிக்கும் கடனை யாரும் ஏற்க வேண்டியில்லாத நியாயமான விதிமுறைகள் இருக்க வேண்டும் என்று அனைவரும் புரிந்துக்கொள்ளும் போதும் இலங்கை

சிறந்த பயனை அடையும். சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியமொன்று பற்றி அமெரிக்க எப்படி சிந்திக்கிறது என்பதற்கு இது எதிரானதாகும்.

நான் ஜப்பான் அல்லது தென்கோரியாவுக்கு பயணித்தாலும் - இந்தோனேசியா மற்றும் மாலைதீவுக்கு நான் இன்று இங்கிருந்து பயணிக்கவுள்ளேன் - அந்த இடங்கள் ஒவ்வொன்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்வை மேம்படுத்தம் வழியொன்றில் அவர்களின் வாழ்க்கையை வாழ்வதற்கு உண்மையில் விரும்பும் ஜனநாயக அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்றுவதே அவர்களது மக்களுக்கான சிறந்த நலன்களாகும் என்பதை புரிந்துக்கொண்டுள்ளன. இந்தியா மற்றும் ஜப்பான் மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளுடன் மாத்திரமன்றி ஐக்கிய அமெரிக்காவுடனும் இலங்கை இணைந்து பணியாற்றக்கூடிய விடயங்கள் இவை தான். இலங்கை மக்களுக்கு நாம் சிறந்த பெறுபேறை வழங்குவோம்.

**கேள்வி:** ஆம். எம்.சி.சி மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் என்பன இங்கு விவாதத்துக்குரிய இன்னுமொரு விடயமாக இருக்கின்றன. இவை தொடர்பில் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதே உங்களது இவ்விஜயத்தின் நோக்கம் என ஊடகங்களில் சில ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. உங்களது கருத்து?

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** ஆம், நான் உண்மையில் இலங்கை பத்திரிகைகளை இன்று காலை வாசித்தேன். அவற்றில் பெரும்பாலானவை இந்த விஜயத்தின் நோக்கத்தை தவறாக புரிந்துகொண்டிருந்தன. பாருங்கள், எம்.சி.சி. என்பது நாம் வழங்கிய சலுகையின் ஒரு இழையாகும். இலங்கை மக்கள் அதை விரும்பினால், சிறப்பானது. அவர்கள் வேறொரு பாதையில் செல்ல விரும்பினால், நிச்சயமாக அது நல்லதே. இந்த பங்காண்மையை முக்கியமானதாக்குவதற்கும், எமது இரு நாடுகளுக்காகவும், நாம் நெருக்கமாக பகிர்ந்து கொள்ளும் இந்த ஜனநாயக நோக்கங்கள் தொடர்பில் செயற்படும் இந்த பிராந்தியத்தின் முக்கியமானதொரு அங்கமொன்றாக இருப்பதற்கும் நாம் ஒன்றிணைந்து பணியாற்றக்கூடிய பல முக்கியமான விடயங்கள் இருக்கின்றன.

**கேள்வி:** ஆம், நீங்கள் இலங்கைத் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தீர்கள். குறிப்பாக பெரும் பொருளாதார பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ள இந்த தொற்றுப்பரவல் சகாப்தத்தில் நீண்டகால இருதரப்பு உறவுகளை விஸ்தரிப்பதற்கான புதிய தெரிவுகள் என்ன?

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** ஆம், இல்லை, இது மிகவும் உண்மையானது. சீனாவின் வூஹானிலிருந்து வந்த இந்த வைரஸிலிருந்தான இந்த சவாலானது, நான் எங்கு பயணித்தாலும் உலகம் முழுவதிலுமுள்ள அனைவரையும் பாதிக்கிறது. இந்தப் பிரச்சினையிலிருந்து எந்த நாடும் தப்பிக்கவில்லை. நிச்சயமாக சுகாதாரப் பிரச்சினைகள் இருக்கின்றபோதிலும் இங்கு மிகப்பெரிய பொருளாதாரப் பிரச்சினைகள் உள்ளன. சுற்றாலாத்துறை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. உலகின் பல பகுதிகளிலும் இதுவே உண்மையாகவுள்ளது.

இது தொடர்பில் எமது பணியிலக்கு தொகுப்பு தெளிவாக இருக்கிறது: இந்த வைரஸை சமாளிப்பதற்கும், நாம் அவதானமாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும், நாம் சிறந்த உதவியை பெறுவதற்கும், சிகிச்சை முறைகளை கண்டறியவும், எமது சொந்த நாட்டினுள் சரியான விடயங்களை மேற்கொள்வதற்கும், உலகெங்கிலும் உள்ள ஏனையவர்களுக்கு உதவவும், மற்றும் தடுப்பூசியொன்றை தயாரிப்பதற்கு எம்மால் முடிந்தவரை வேகமாக செயற்படுவதற்கும் நாம் முடிந்தவரை சிறப்பாக செயற்படுகிறோம். நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இறுதியாக நாம் இலக்கை அடைந்து விடுவோம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நாம் அதை செய்யும் போது, இந்த நோயினால் ஏற்படும் உயிராபத்தை நாம் குறைப்போம் என்பதுடன், எமது பொருளாதாரங்களை மீண்டும் முன்னேற்றுவதற்கான கடினமானதும் முக்கியமானதுமான உழைப்பை நாம் ஆரம்பிக்க முடியும்.

எனது விஜயத்துக்கான காரணம் பற்றி நீங்கள் ஆரம்பத்தில் கேட்டீர்கள். இலங்கைக்கு நாம் சுமார் 6 மில்லியன் அமெரிக்க டொலர் COVID உதவியை வழங்கியுள்ளோம். ஆதை செய்ததில் எமக்கு மகிழ்ச்சி. எனினும், இறுதியில் அதிகமான அமெரிக்க வர்த்தகங்கள் இங்கு வரும் என்பதே இலங்கை மக்களுக்கு அமெரிக்கா செய்யும் சிறந்த விடயமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். ஏற்றுமதிக்கான இடத்தை நாம் வழங்குவோம். இலங்கை ஏற்றுமதிகளுக்கான மிகப்பெரிய இடமாக நாமே இருக்கிறோம். இலங்கை மக்கள் சிறப்பாக வாழ வழிசெய்து இலங்கை மக்களிடமிருந்து பல்வேறு பொருட்களை நாமே வாங்குகிறோம் என்ற உண்மை குறித்து நாம் பெருமையடைகிறோம்.

எனினும், இங்குள்ள அமெரிக்க முதலீடுகளால் வாழ்க்கைகளை மேம்படுத்த முடியும் என்று நாம் நம்புகின்றோம். நாம் வரும் போது, நாம் இலங்கையர்களை வாடகைக்கு அமர்த்துகிறோம், இலங்கையர்களுக்கு பயிற்சியளிக்கிறோம், சிறந்த வணிக நடைமுறைகளுடன் ஒத்துப்போகும் வழியொன்றில் நாம் அந்த சமூகங்களை கட்டியெழுப்புகிறோம். இது ஜனநாயக வடிவத்தினதும் நாம் பகிர்ந்துகொள்ளும் ஒன்றினதும் மாதிரியொன்றாகும். இது சீன அரசாங்கம் உடன் எடுத்துவரும் வடிவம் கிடையாது. அவர்கள் தங்களது அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுடன் வரும் போது அது மிகவும் வித்தியாசமாக தெரிவதுடன், உணரவும் படுகிறது. அதுவொரு கனமான கையுடனும் கனமான தூண்டிலொன்றுடனுமே வருகிறது. எமது மதிப்பீட்டில் அது இலங்கை மக்களின் சிறந்த நலன்களுக்கானது கிடையாது. அமெரிக்கர்கள் வரும் போது இலங்கை மக்களுக்கு சிறந்த விடயங்கள் பெருகிவரும் என்று நாம் நம்புவதுடன், நாம் இங்கு வருவதற்கு மிகவும் விரும்புகிறோம். சிறந்த நண்பனாகவும் பங்காளராகவும் இருக்க விரும்புகிறோம்.

இலங்கை அதனது பங்கைச் செய்ய வேண்டும். அந்த வகையான முதலீடுகளுக்கு அழைப்பு விடுக்கும் இடமாக இது இருக்க வேண்டும். இன்றைய காலைப் பொழுது ஊக்கமளிப்பதாக இருந்தது. ஜனாதிபதி இதனை நன்கு புரிந்து வைத்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். நிலையான உதவிகள் உண்மையில் வெளிப்படையாக தேவைப்படும் இலங்கையின் சில பகுதிகளுக்கு அபிவிருத்தியை ஏற்படுத்தும் விடயங்களான புதுபிக்கத்தக்க சக்தி யோசனைகள் மற்றும் விவசாயம் தொடர்பிலான உதவிகளுடன் எம்மால் வர முடிவதை காண அவர் விரும்புகிறார்.

**கேள்வி:** இறுதியாக, மிகச் சுருக்கமாக, இலங்கை மக்களுக்கு நீங்கள் வழங்கும் செய்தி என்ன?

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ:** செய்தி என்னவெனில் ஐக்கிய அமெரிக்கா இன்னுமொரு ஜனநாயக நாடாகும். தற்போது நாம் 72 வருடங்களாக நண்பர்களாக இருக்கிறோம். நாம் தொடர்ந்தும் இருப்போம் என எதிர்பார்க்கின்றேன் என்பதுடன், இலங்கை மக்களுக்கு வாழ்க்கையை சிறப்பாக்குவதில் சிறந்ததோர் அங்கமாக இருக்க நாம் விரும்புகிறோம்.

**கேள்வி**: இராஜாங்க செயலாளர் பொம்பேயோ அவர்களே, எம்முடன் இணைந்திருந்தமைக்கு நன்றி.

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ**: ஆம், நன்றி.

**கேள்வி**: உங்களுக்கு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**இராஜாங்க செயலாளர் பொம்பேயோ**: நன்றி, மிக்க நன்றி.

**கேள்வி:** நன்றி.